ரூபா
# 7,112 மில்லியன் முதலீட்டின் மூலம்
பாடசாலைப் பிள்ளைகளுக்கு

சுரக்ஷா

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

SLIC Sri Lanka Insurance GENERAL

# மாணவர் காப்பீட்டுத் திட்டம்

அரசின் சகல பாடசாலைகள், அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் உதவி பெறும் விசேட பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்காக கல்வி அமைச்சினால் செயற்படுத்தப்படும் சுரக்ஷா மாணவர் காப்பீட்டுத் திட்டத்தை **2024.07.01** தொடக்கம் மூன்று வருட காலத்திற்குச் செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு, நிதி அமைச்சுடன் இணைந்து மேற்கொண்டுள்ளது.

## காப்பீட்டின் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கு...

### சுகாதாரக் காப்பீடு

- வதிவிட சிகிச்சைக்குரிய நன்மைகள் - ரூ.300,000/= (அரச/ தனியார் வைத்தியசாலை)
- கடுமையான நோய் சிகிச்சைக்குரிய நன்மைகள் - ரூ.1,500,000/= வரை
- வெளி சிகிச்சைக்குரிய நன்மைகள் - ரூ.20,000/=

### விபத்துக் காப்பீடு

- முழுமையான மற்றும் நிரந்தர பாதிப்புகளுக்காக - ரூ.200,000/=
- நிரந்தர அரைகுறையான பாதிப்புகளுக்காக - ரூ.150,000/=
- தற்காலிக பாதிப்புகளுக்காக - ரூ.25,000/= தொடக்கம் ரூ. 100,000/= வரை

### ஆயுட் காப்புறுதி

வருடாந்த வருமானம் - ரூ.100,000/= ஐ விட குறைவான வருமானம் கொண்ட குடும்பப் பிள்ளைகள் தவிர, 'அஸ்வெசும' வேலைத்திட்டத்திற்கு உட்பட்ட குடும்ப பிள்ளைகளின் பெற்றோர் / சட்டப்பூர்வ பாதுகாவலர்களின் மரணத்தின் போது, மாணவர் ஒவருக்கு ரூ.75,000/= வீதம் வழங்கப்படும். ஒரு மரணத்திற்காக ஒதுக்கப்படும் அதிகபட்ச தொகை ரூ.225,000/= என்பதுடன், குடும்பத்தில் உள்ள அனைத்து மாணவர்களுக்கிடையில் அத்தொகை சமமாக ஒதுக்கப்படும். பெற்றோர் இருவரினதும் அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலரின் மரணத்தின் போது, வெவ்வேறாக இக் காப்பீடு உரித்துடையதாகும்.

இத் திட்டத்தின் ஊடாக நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக உரிமைக் கோரும் பத்திரம் உள்ளடங்கலாக ஏனைய சகல ஆவணங்களும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் : **https://www.srilankainsurance.lk/suraksha/** எனும் இணைய தளத்தில் பதிவேற்றம் (upload) செய்யப்படல் வேண்டும்.

சுரக்ஷா காப்பீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய, கல்வி அமைச்சு மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு இடையிலான ஒப்பந்தம், கல்வி அமைச்சில், கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த அவர்களின் தலைமையில் கைச்சாத்திடப்பட்டது.

கல்வி அமைச்சின் சார்பாக கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர அவர்கள் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதுடன், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சார்பாக பிரதம செயற்பாட்டு அதிகாரி பிரியந்த பெரேரா அவர்களும் கையொப்பமிட்டனர்.









පරිවර්තනීය අධ්‍යාපන ක්‍රියාදාමයෙන් නවෝත්පාදනය බලගැන්වෙන සුහුරු රටක්
இயல்மாற்றும் கல்வி செயன்முறைகளால் புத்தாக்கத்தை வலுவூட்டும் சாமர்த்திய நாடு
A smart country where innovation is empowered by transformative education